கோவையில் கழக மாணவரணி சார்பில் மாணவரணிச் செயலாளர் இரா. இராஜீவ்காந்தி தலைமையில் நடை பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.

‘கோயில் நிதியில் கல்லூரியைத் திறப்பதா’ என்ற

எடப்பாடி பழனிச்சாமியை கண்டித்து - கோவையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

தி.மு.க. மாணவரணி சார்பில் – இரா.இராஜீவ் காந்தி தலைமையில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்!

கோவை, ஜூலை 16- முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தர வின்படி; ஏழை, எளிய, சாமானிய மாணவர்களுக்கு உயர்கல்வி பெற முதலமைச் சர், கழகத் தலைவர் அவர்கள் கல்லூரிகளைத் திறந்து வைத் ததை “கல்லூரிகளைத் திறப் பது சதிச்செயல்” என பதவி சுகத்துக்காக பேரறிஞர் அண் ணாவை அடகு வைத்த எடப் பாடி பழனிசாமி இப்போது, “உங்களுக்கெல்லாம் எதற்கு கல்வி?” என்ற சங்கிகளின் குர லாய் ஒலிக்கத் தொடங்கியி ருக்கிறார்.

கோவில்களுக்கு மக்கள் காணிக்கையாகக் கொடுக் கும் உபரி நிதியிலிருந்து கல்வி நிலையங்கள், சிறார், முதி யோர் பராமரிப்பு நிலையங் கள், மருத்துவமனைகள் அமைக்கலாம் என்பது இந்து சமய அறநிலையத்துறையின் சட்டங்களில் ஒன்று. ஆனால் அதுகூடத் தெரியாமல் திரா விட இயக்கத்தின் துரோகி யாக, கல்விக்காக திராவிட மாடல் அரசு எடுக்கும் முன் னெடுப்புகளைக் கொச்சைப் படுத்தும் விதமாக கோவை யில் பேசியுள்ளார் எடப் பாடி பழனிசாமி.

அவரின் இந்தப் பேச்சைக் கண்டித்து தி.மு.க. மாண வர் அணி சார்பில் நேற்று முன்தினம் (ஜூலை 14ஆம் தேதி) பிற்பகல் 2.30 மணி அளவில், “கோவை, டாடா பாத், சிவானந்தா காலனி” யில், தி.மு.க. மாணவர் அணி செயலாளர் இரா. ராஜீவ்காந்தி தலைமையில் மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்கு மார், தமிழ் கா. அமுதரசன், பி. எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகி யோர் முன்னிலையில் ”மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம்” நடைபெற்றது.

இக்கண்டன ஆர்ப்பாட் டத்தில், கழக மாணவர் அணி யின் மாவட்ட, மாநகர, ஒன் றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப் பின் நிர்வாகிகள் எனத் தமிழ் நாடு முழுவதுமி ருந்து 20,000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கண்டன ஆர்ப்பாட் டத்தில் கோவை மாநகர் மாவட்ட அமைப்பாளர் சிவப்பிரகாஷ் வரவேற்புரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத் தின் நோக்கவுரையைகோவை வடக்கு மாவட்ட அமைப்பா ளர் பிரபுவும், நன்றியுரை யைக் தெற்கு மாவட்ட அமைப்பாளர் அந்தோணி ராஜ் நிகழ்த்தினர்.

கண்டன ஆர்ப்பாட்டத் தில் தமிழ்நாட்டின் கல்விக் கான நிதியை ஒதுக்காதது, நீட் தேர்வு மூலம் ஏழை, எளிய மாணவர்களின் கனவு களைச் சிதைத்தது, துணை வேந்தர்கள் நியமிக்கவிடா மல் செய்தது, பேராசிரியர் கள் நியமனங்களில் முட்டுக் கட்டை, சிறுபான்மையின, தலித், பழங்குடியின மாண வர்களின் உயர்கல்விக்கான கல்வி உதவித் தொகையை நிறுத்தியது உள்ளிட்ட வற்றை மையப்படுத்தி ஒன் றிய அரசுக்கு எதிராகவும் எடப்பாடி பழனிச்சாமியின் துரோகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகை யில் முழக்கங்கள் எழுப்பப் பட்டன. இந்த முழக்கங்கை மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி எழுப்ப கூடியிருந்த மாணவர்கள், இளைஞர்களும் ஒருசேர எழுப்பினார்கள்.

மேலும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் ந.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத் தூர் ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகே சன் உள்ளிட்ட கழக நிர்வா கிகள் எடப்பாடி பழனிசாமி யைக் கண்டித்தும் மோடி அரசுக்கு எதிராகவும் கண் டன உரை ஆற்றினர்.

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர்கள் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளர்களாக

திரு. **இராபர்ட் (எ) இராஜதுரை**

484, லால்பகதூர் சாஸ்திரி தெரு, அத்திப்பட்டு, திருவள்ளூர் - 600 120

திரு. **இராஜேஷ் ஜெயின்**

29, கொண்டித்தோப்பு, அயலூர்முத்தையா தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 079.

திரு. **எஸ்.டி.ஆர். பொன்சீலன்**

100ஜே/29/2, மில்லர்புரம், தூத்துக்குடி 628 008. ஆகியோர் **தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளர்களாக** தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து கழகப் பணியாற்றுவார்கள்.

``அண்ணா அறிவாலயம்''
சென்னை 600 018,
நாள் : 14-7- 2025.

துரைமுருகன்,
பொதுச் செயலாளர்
தி.மு.க.

ஈரோடு மேற்கு தொகுதி, வீரப்பன் சத்திரம் பகுதி 13வது வார்டில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க் கையை தலைமைக் கழக பார்வையாளர் மீனா ஜெயக்குமார் ஆய்வு செய்தார். நிகழ்வில் பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன், வட்ட கழக செயலாளர் முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

உலகைப் படித்த ஒப்பற்ற மேதை!



கொம்புத்தேன் பேச்சல்ல, எளிய பாணி!
கோமளப்பூஞ் சிவப்பல்ல, கருப்பு மேனி!
தும்பைப்பூக் கதராடை! முழங்கா லைப்போய்த்
தொடுகின்ற மழைக்கைகள்! படர்ந்த நெற்றி!
தெம்புக்குத் தெம்பூட்டும் நிமிர்ந்த திண்டோள்!
தேசத்தை நினைந்துருகும் வெளிச்சக் கண்கள்!
கம்பீரத் திருத்தோற்றம்! ஏழை நேசர்!
“கல்விக்கண் திறந்தமகன்” காம ராசர்!

கார்முகிலாய் பொதுவாழ்வில் மக்கள் மீது
கருணைமழை பொழிந்தவர்நம் காம ராசர்!
சீர்மிகுந்த ஆட்சிசெய்த காம ராசர்!
சிறைக்கொடுமை அனுபவித்த காம ராசர்!
வீரர்களைப் போற்றிநின்ற காம ராசர்!
விடுதலைப்போர்த் தியாகியன்றோ காம ராசர்!
பார்புகழும் பெருந்தலைவர் காம ராசர்!
“ படிக்காத மேதை”எங்கள் காம ராசர்!

நதிநீரைச் சேகரிக்க அணைகள் கட்டி
நாட்டுமக்கள் துயர்தீர்த்த காம ராசர்!
புதியபல பாலங்கள் கட்டித் தந்து
போக்குவரத்து இடர்தீர்த்த காம ராசர்!
“மதியஉண வுத்திட்ட” அன்னம் இட்டு
மாணவரின் பசிதீர்த்த காம ராசர்!
முதலமைச்சர் பொறுப்புக்கே பெருமை சேர்த்த
“முதல், முதல் அமைச்சர்” எங்கள் காம ராசர்!

அருள்மிகுந்தார் இவர்தந்தை குமார சாமி!
அன்புத்தாய் சிவகாமி! இவர்கள் பெற்றுத்
தரமகிழ்ந்து சிலிர்த்ததுநம் அன்னை பூமி!
தலைவர்களே விருதுகளைப் பெறுவார்! ஆனால்
விருதுநகர் “நம்காம ராச ரையே”
விருதாகப் பெற்றநக ரன்றோ! இந்தப்
பெருமை,புகழ் குலுக்கலிலே கிடைத்த ஒன்றோ?
பேருழைப்புத் தியாகத்தின் பரிசே யன்றோ!

பனையேறும் குடும்பத்தில் பிறந்தார்! ஆனால்
பலர்ஏறி, மேல்உயர ஏணி யானார்!
மனைமக்கள் இவர்வாழ்வில் இல்லை! நாட்டு
மக்களைக் கரைசேர்க்கும் தோணி யானார்!
சுனைநீராய் பயன்பட்டுத் தொண்டு செய்தார்!
சுதந்திர நெருப்பில், நெய் யானார்! எள்ளின்
முனையேனும் சுயநலம்பார்த் தாரா? கண்கள்
மூடும்வரை பிறர்க்கென்றே வாழ்ந்து போனார்!

ஓலையிட்ட குடிசைகளின் பிள்ளை கட்கும்
உணவளித்த பெருந்தகை!இன் றிருந்தால், கல்விச்
சாலையெங்கும் யுகப்புரட்சி செய்யும் எங்கள்
“தளபதியை” தமிழ்நாட்டின் பள்ளி யெங்கும்
“காலைஉண வுத்திட்டம்” கொண்டு வந்த
கலைஞரின் திருமகனை உச்சி மோந்து
மாலையிட்டு அரவணைத்தே மகிழ்ந்தி ருப்பார்!
“மகனே!நீ வாழ்க!”வென நெகிழ்ந்தி ருப்பார்!

படிக்காத மேதை!இவர் போல்உ ணர்ந்துப்
படித்தவர்கள் யாருமில்லை உலகை! மோகம்
பிடிக்காத வர்!இவர்போல் தேச பக்தி
பிடித்தவர்கள் யாருமில்லை! செல்வம் சேர்க்கத்
துடிக்காத வர்!இவர்போல் விடுத லைக்குத்
துடித்தவர்கள் யாருமில்லை! தேநீர் கூட
குடிக்காத மனிதர்!இவர் போல்க ரைத்துக்
குடித்தவர்கள் அரசியலை, எவரும் இல்லை!

விளைத்தெங்கும் இவர்சொத்து சேர்க்க வில்லை!
வெளிநாட்டில் பணம்போட்டுக் குவிக்க வில்லை!
வளைத்தெங்கும் மாளிகைகள் கட்ட வில்லை!
வாடகைக்கே குடியிருந்தார் வாழ்நா ளெல்லாம்!

இளைத்துப்போ னார்!இதயம் வெடித்துப் போனார்!
இந்தியா “நெருக்கடியால்” இருண்ட நேரம்
களைத்துப்போ னார்!ஆமாம், “கலைஞர்” கைமேல்
கைவைத்துத் “தாய்நாட்டைக் காப்பாற்” றென்றார்!

பூவைத்து, மலர்வளையம் வைத்துக் கண்ணீர்
பொழிந்துவிட்டுச் சிலர்சென்றார்! புகழு டம்பில்
மூவர்ணக் கொடிபோட்டுப் போர்த்தி விட்டு
“ முடிந்ததுநம் கடமை”யெனச் சிலபேர் சென்றார்!
தாய்வைத்த இதயத்தைக் கொண்டி லங்கும்
“தலைவர்நம் கலைஞர்”தாம், உண்மை யான
நேயத்தில் கிண்டியிலே “காம ராசர்
நினைவிடத்தை” உருவாக்கிப் பெருமை சேர்த்தார்!

வரும்தலைவர் போம்தலைவர் நாட்டில் உண்டு!
வாழ்ந்தசுவ டில்லாத தலைவர் உண்டு!
தரும்தலைவர், பெறும்தலைவர் அதிகம் உண்டு!
தலைவர்களில் இந்நாடு வணங்கிப் போற்றும்
“பெருந்தலைவர்” உயர்காம ராசர் அன்றோ!
பிறர்க்காக வாழாமல், உழைத்தி டாமல்
திரிந்தலைவர் சிலர்தலைவர் ஆவ தற்கே!
தெப்பமெல்லாம் கப்பலென்றால் ஒப்பு வோமா?

ஏழ்மைநிறை குடும்பத்தின் பிள்ளை யாகி
இளம்வயதில் தந்தையினை இழந்து வாடி
ஊழ்வினைஎன் றிருக்காமல் தியாகம் செய்தே
உழைத்துயர்ந்து தமிழ்நாட்டின் முதல்வ ராகித்
தாழ்வதற்றும் விடுதலைப்போர்க் “கர்ம வீரர்”
தலைவர்களை உருவாக்கும் தலைவர் ஆகி
வாழ்வைஇந்த நாட்டுக்கே அர்ப்ப ணித்து
வருங்காலத் தலைமுறைக்கும் வரலா றானார்!

காற்றாண்டு கொண்டிருக்கும் இவ்வை யத்தின்
கல்வெட்டில் சிலர்பெயரே நிலைத்தி ருக்கும்!
நூற்றாண்டு கள்கடந்தும் காம ராசர்
நூலகத்தில் மட்டுமல்ல, தாய கத்தில்
மாற்றாரின் நெஞ்சகத்தும் குடிகொண் டுள்ளார்!
மகத்தான பெருந்தலைவர் பிறந்த நாளில்
ஏற்றுக்கொள் வோம்சபதம்! “மனித நேயம்”
இறுதிவரை வெற்றிபெற உறுதி ஏற்போம்!

... கவிச்சுடர்
கவிதைப்பித்தன்

ஏரலில் உடல்நிலை பாதிக்கப்பட்ட தி.மு.க. மூத்த பிரமுகர் சக்திவேலின் மருத்துவத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ.1 லட்சம் மற்றும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சார்பில் ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.1.50 லட்சத்தை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் வழங்கினார். தூத்துக்குடி மாவட்டம் ஏரலைச் சேர்ந்தவர் சக்திவேல் (83). மின்வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் தி.மு.க.பேச்சாளராகவும், ஏரல் நகர துணைச்செயலாளராகவும் உள்ளார். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ். ஆர். எஸ்.உமரிசங்கர், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ராமஜெயம், முன்னாள் அமைப்பாளர் ஜெகன், ஸ்ரீவைகுண்டம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கோட்டாளம், ஏரல் பேரூர் செயலாளர் ராயப்பன், ஏரல் அனைத்து வியா பாரிகள் சங்கச்செயலாளர் மணிவண்ணன், முன்னாள் நகரச் செயலாளர் பார்த்திபன், இளைஞர் அணி ஒன் றிய அமைப்பாளர் ராஜவேல், நகர பொருளாளர் ஆத்தாங்கரையான். ஒன்றிய துணைச் செயலாளர் சண்முகராஜா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.